32
50 காசு
மாத இதழ்
அக்'83

# சுட்டி





FREE E BOOKS - www.thamizham.net - TM2468 / April 2011

FREE E BOOKS - www.thamizham.net - TM2468 / April 2011

எருக்கம் பூக்களே பூக்கும்
இந்தப் பாடத்திட்ட குப்பை மேட்டில்
என்றேனும் ஒருநாள்
குறிஞ்சிப் பூக்களும் மலர்வதுண்டு
அவையும் கூட
தண்ணீர்விட மனமில்லாத
தோட்டக்காரர்களால்
வாடி வதங்கி வீழ்வதுமுண்டு
இந்த மேகவீதியை
காகங்களே ஆக்கிரமிப்ப
தால்
குயில்களுக்கு நுழைவுச்
சீட்டு
கிடைப்பதில்லை
பண நீராலும்
பரிந்துரை உரத்தாலும்
கல்விச் செடியில்
மலட்டு மலர்களே
மலருகின்றன இன்னும்
இதற்கு ஒரு
அதிர்ச்சி வைத்தியம்
அவசரமாய் தேவைப்படுகிறது

—வெண்மணி

(கனல்வரிகள் கவிதைத்
தொகுப்பிலிருந்து)




பல்கலைக் கழகத்தைக் காப்பாற்றுங்கள்!

FREE E BOOKS - www.thamizham.net - TM2468 / April 2011

அனுபவக் கட்டுரைப் போட்டி

# நியாயம் கேட்டேன்

ஆறுதல் பரிசு

அன்று இறுதித் தேர்வு ஆரம்ப நாள். நானும் என் நண்பனும் தினம் பள்ளிக்குச் செல்லும் பஸ்ஸில் அன்றும்' ஏறிக் கொண்டோம். அவனுக்கு இருக்கை கிடைத்தது. நான் நின்று கொண்டிருந்தேன். கண்டக்டர் வந்தவுடன் நான் முதலில் 50 பைசா டிக்கெட் பெற்றுக் கொண்டேன். அடுத்து என் நண்பன் டிக்கெட் வாங்கினான். இரு நிறுத்தங்களுக்குப் பிறகு இரு டிக்கட் பரிசோதகர்கள் முன்னும் பின்னுமாக ஏறிக் கொண்டனர். முன்புறம் ஏறியவர் வரிசையாக டிக்கட் பரிசோதித்து விட்டு என்னிடமும் நண்பனிடமும் டிக்கட் கேட்டார். நான் டிக்கட் கொடுத்தேன். அவன் டிக்கட்டைத் தேடினான். கிடைக்க வில்லை. இதைக் கண்ட அவர் பக்கத்தில் இருந்தவரிடம் டிக்கட் பரிசோதித்து விட்டு மீண்டும் என் நண்பனிடம் டிக்கட் கேட்டார். அவன் பயந்த முகத்துடன் "சார் டிக்கட் தொலைந்து போய் விட்டது" என்றான். இது அவருக்கு சற்று கோப மூட்டியது. பல கேள்விகளை அம்பு போல் அவன் மீது தொடுத்தார். ►

## வருந்துகிறோம்

ஜனவரி 82 முதல் 'சுட்டி'யின் ஊற்றங்கரை பகுதி முகவராக மிகச் சிறப்பாக பணியாற்றி வந்த திரு. சு. இராதா கிருஷ்ணன் B.A (BGL) அவர்கள் 10-8-83 அன்று எதிர்பாராத விபத்தொன்றால் மறைந்தார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியை சேர்ந்த இவர் சுய மரியாதை முறையில் திருமணம் செய்து கொண்டதுடன் சாதி ஒழிப்பு போன்ற சமுதாய சீர்திருத்தப் பணிகளுக்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர்.

அவரது பிரிவால் வாடும் குடும்பத்தாருக்கும், நண்பர்களுக்கும் எங்களது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவர்களது துயரத்தில் நாங்களும் பங்கேற்கிறோம்.

ஆசிரியர் குழு

FREE E BOOKS - www.thamizham.net - TM2468 / April 2011

இதைக் கண்ட நானும் அவன் டிக்கட்டைத் தேடினேன். கிடைக்க வில்லை. என் நண்பன் பயத்தால் விறைத்துக் கொண்டிருந்தான். நான் பரிசோதகரிடம் "சார், இவன் டிக்கட் வாங்கினான்" என்று கூறி முடிப்பதற்குள் அடுத்த பரிசோதகர் டிக்கட் பரிசோதித்து விட்டு அங்கு வந்தார். பின் இருவரும் ஏதோ பேசி விட்டு டிக்கட்டிற்கான தொகையும் அபராதமும் சேர்த்து கொடுக்க வேண்டும் என்றனர். உண்மையில் டிக்கட் வாங்கினவனுக்கு இப்படி ஒரு அநியாயமா என மனதிற்குள் எண்ணிக் கொண்டு மீண்டும் அவரிடம் பலவாறாக வாதாடியும் பயன் அளிக்கவில்லை. பின் கண்டக்டரிடம் நான், "இவன் டிக்கட் வாங்கினான் இல்லையா? என்று கேட்டதற்கு அவர் பரிசோதகரிடம் "இவன் வாங்கியிருக்க மாட்டான்" எனக் கூறி விட்டு நழுவி விட்டார். பின் பரிசோதகர்கள் இருவரும் என் நண்பனிடம் "பணம் கொடு. இல்லாவிட்டால் போலீசில் பிடித்துக் கொடுப்போம்" என்று அச்சுறுத்தினர். அப்போது நண்பனை எப்படி இதிலிருந்து காப்பாற்றுவது பலவாறாக சிந்தித்துக் கொண்டிருந்தேன். முடிவில் என் டிக்கட்டின் அடுத்த நம்பரை எழுதி அதைப் பரிசோதகரிடம் நீட்டினேன். "சார் நானும் இவனுமாகத்தான் ஒருமித்து பஸ் ஏறினோம். நான் டிக்கட் வாங்கிய பின் இவன் டிக்கட் வாங்கினான், வேண்டுமென்றால் இந்த நம்பரை பரிசோதித்துப் பாருங்கள்" என்று சற்று கோபமுடன் கூறினேன்.

இதற்கிடையில் பஸ் எங்கள் பள்ளி முன் வந்து நின்றது. நான் எழுதிக் கொடுத்த நம்பர் படி ஏதாவது டிக்கட் கிடைக்குமா என எண்ணி இரு பரிசோதகர்களும் பயணிகளிடம் டிக்கட்டுகளை வாங்கிக் கொண்டு கீழே இறங்க அனுமதித்தனர். அங்கு இறங்கியவர்களின் டிக்கட்டில் 50 பைசா டிக்கட் நான் கொடுத்தது மட்டுமே. ஆனால் இரண்டு 50 பைசா டிக்கட்டுகள் நாங்கள் இறங்கும் இடத்திற்கு விற்கப்பட்டிருந்தது, கண்டக்டர் எழுதி வைக்கும் அந்தச் சிறு குறிப்புத் தாளில் இருந்தது. அதன் படி நான் கொடுத்த நம்பர் சரியாயிருக்கவே என் நண்பனை பணம் ஏதும் வாங்காமல் போக விட்டார்கள்.

அனுப்புநர் : K ராஜன், சின்னத்துறை, தூத்தூர் (P.O)
கன்னியாகுமரி மாவட்டம்-629 176.

FREE E BOOKS - www.thamizham.net - TM2468 / April 2011

இந்தியாவிலேயே முதன்முதலாகக் கள்ளிக் கோட்டையில் காபரே நடனப் பெண்கள் ஒருங்கிணைந்து சங்கம் ஆரம்பித்துள்ளனர். தமது உரிமைகளைப் பாதுகாக்கவும், நெடுங்காலமாகத் தமக்கிருக்கும் குறைபாடுகளை நிவர்த்தி செய்து கொள்ளவும் இவர்கள் ஒன்று திரண்டுள்ளனர்.

இந்தச் சங்கத்தின் காரியதரிசியான தீபா பத்திரிகைக்கு அளித்த முதல் பேட்டியிலேயே காபரே நடனத்திற்குத் தடை விதிப்பதை எதிர்க்கும் மக்களது கீழ்த்தரமானப் போக்கைக் கண்டித்தார். பெண்கள் ஆண்களை மகிழ்விக்க வந்த விளையாட்டுப் பொருட்களே என்று கருதுகின்ற பிரபுத்துவ சமுதாயத்தின் அறிகுறிகளில் ஒன்று தான் இந்த காபரே நடனமும் என்னும் தீபா, வேறு நல்ல வேலைகள் அளிக்கப் பட்டால் இந்த நடனத் தொழிலை விட்டொழித்து விட அவர்கள் தயாராக இருப்பதாகக் கூறுகிறார்.

## காபரே நடனப் பெண்கள் சங்கம்

ஒழுக்க சீலர்களாக வேஷம் போடுகின்ற மதக் கூட்டங்களின் மீது சீறிப் பாய்கிறார் தீபா. காபரே நடனத்தைப் பற்றி இன்று தூற்றுகின்ற இவர்கள் அன்று நாங்கள் வேலை தேடி அலைந்த போது எங்கிருந்தார்கள் என்று கேட்கிறார். மூன்று மாதக் குழந்தையுடன் கணவனால் உதைத்துத் தள்ளப் பட்ட ஷகிலா என்னும் காபரே நடனப் பெண்ணைப் பற்றி கூறுகையில் நிராதரவான நிலையில் வேறு வழியின்றி உயிர் வாழ காபரே நடனத் தொழிலை மேற்கொண்ட இப்பெண் தனக்கு ஒரு நல்ல வேலை கிடைத்த மறு நிமிடமே இவ்வாழ்வுக்கு முழுக்கு போட்டு விடத் தயாராக இருப்பதை தெரிவித்தார்.

நாட்டில் தற்போது 4000 காபரே நடனப் பெண்கள் உள்ளனர். கடந்த ஜூன் மாத இறுதியில் கள்ளிக் கோட்டையில் உள்ள பெரும்பாலான இரவு விடுதிகள் செயலற்றுப் போயின, காரணம் காபரே நடனப் பெண்கள் நிர்வாணக் காட்சிகளுக்கு முற்றுப் புள்ளி வைக்கும் பொருட்டு வேலை நிறுத்தம் செய்தது தான்.

—[illegible]

FREE E BOOKS - www.thamizham.net - TM2468 / April 2011

பழுதடைந்த வாகனங்களுக்கு உதிரி பாகங்களைப் பொருத்தி இயக்குவது போல மனித உடல் உறுப்புக்களையும் மாற்று அறுவை சிகிக்சை செய்து இயக்கும் அற்புதத்தை விஞ்ஞானம் உலகுக்கு அளித்துள்ளது. இந்த அற்புதக் கண்டு பிடிப்பு இந்தியாவில் புதிய உடல் வியாபாரத்தைத் தோற்று வித்துள்ளது.

இறந்தவரது பிட்யூட்டரி சுரப்பியும், பிரசவத்திற்குப் பிறகு வெளியாகும் நஞ்சும் இன்று அதிக விற்பனையாகும் சரக்குகள். பிட்யூட்டரி சுரப்பியிலிருந்து தயாரிக்கப்படும் ஹார்மோன்களின் விலை 2 மி.லிட்டருக்கு ரூ 1200. பற்றாக் குறை உள்ளதும், எதிர்காலத்தில் விலையேற்றம் பெறக் கூடியதுமான இந்த ஹார்மோன்களைத் தயாரிக்க மருந்துக் கம்பெனிகள் எவ்வளவு விலை கொடுத்தும் பிட்யூட்டரி சுரப்பிகளை வாங்க தயாராக உள்ளன.

# மனித உடல் வியாபாரம்

இதே போல பிரசவத்திற்குப் பிறகு வெளியாகும் நஞ்சும் ஹார்மோன் தயாரிப்புத் தொழிலில் ஒரு மலிவான கச்சாப் பொருள்.

பம்பாயில் சில மருத்துவமனைகளில் பிரேதப் பரிசோதனைக்குப் பிறகு பணியாட்கள் பிட்யூட்டரி சுரப்பியை எடுத்து ரூ 1 முதல் ரூ 5 வரை விற்று வந்தனர். இன்று மருத்துவர்கள் உபரி வருமானம் பெறும் பொருட்டு தாங்களே இந்த சுரப்பியை எடுத்து ரு 25க்கு விற்கின்றனர்.

மருத்துவமனை ஊழியர்கள் தான் பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் காரணமாக இறந்தவரது நோய் பற்றிய அறிவு கூட இல்லாமல் உறுப்புக்களை எடுத்து வியாபாரம் செய்கின்றனர் ஆனால் சமூகப் பொறுப்பு வாய்ந்த மருத்து வர்கள் உடல் வணிகர்களாக மாறுவது கேவலமல்லவா? அபாயகரமான நோய்களின்றி அநாதைகளாக இறப்பவரது உடல் உறுப்புக்களை எடுத்து தேவையான நோயாளிக்கு பயன்படுத்தக் கூடாதா? இதனால் ரத்தம், கண், சிறுநீரக வங்கிகளை நடத்தும் ஏஜண்டுகள் நோயாளியிடம் அநியாயமாக பணத்தை ஊறிஞ்சுவதைத் தடை செய்யலாமே!

—கமலா

FREE E BOOKS - www.thamizham.net - TM2468 / April 2011

# எமக்கு வந்தவை

**உளிகள் :** (கவிதைத் தொகுப்பு)
ஆசிரியர்: அல்லிஉதயன், வெளியீடு: உண்ணாமலை பதிப்பகம், ஸ்டாலின் தெரு, அல்லிநகரம் (தேனி).626531. விலை ரூ 3.75

**தூக்கு மரங்கள் :** (கவிதைத் தொகுப்பு)
ஆசிரியர்: பறம்பை பரணி, வெளியீடு: புதுமை பதிப்பகம், தொடர்பு முகவரி: 5/97, முத்தாலம்மன் கோயில் தெரு, பரமக்குடி.623707. விலை ரூ 1.00

**ஈழப்புலி ஆற்றுப்படை :** ஆசிரியர்: புலவரேறு அரிமதி தென்னகன், வெளியீடு; பிரகாசம் பதிப்பகம், தொடர்பு முகவரி: அரிமதி இளம்பரிதி தென்னன் பதிப்பகம், 22-அ, வேளாளர் வீதி, புதுச்சேரி.605001. விலை ரூ 2.50

**பூங்காற்று :** (கவிதைத் தொகுப்பு) சிதறல் வெளியீடு
தொடர்பு முகவரி: கு. கருணாநிதி (ஒத்துழைப்பாளர்)
செ. புதுப்பாளையம் அஞ்சல், நாமக்கல், சேலம் மாவட்டம
விலை 50 காசுகள்.

**உப்புத்தூள் :** (உழைக்கும் குழந்தைகளின் நிலைப்பற்றிய அவலக்கவிதை) ஆசிரியர்: பேராசிரியர் ஜி. வில்சன் அமல்ராஜ், திருப்பத்தூர், வட ஆற்காடு. விலை 25 காசுகள்.

**விளையாட்டுக் களஞ்சியம் :** (விளையாட்டுத் துறை இலக்கிய மாத இதழ்) ஆசிரியர்: R. ஆடம் சாக்ரடீஸ், 10, ரெங்கநாதன் தெரு, தி. நகர், சென்னை-600 017. தனியிதழ் ரூ 1.00
ஆண்டுசந்தா: ரூ. 10.00 ஆயுள் சந்தா: ரூ 100.00

---

சுட்டி வெளியீட்டாளர் பொறுப்பை இதுவரை ஏற்று சிறப்பித்த வழக்கறிஞர் திரு. பொ. இரத்தினம் அவர்கள் வழக்கறிஞர் தொழில்சம்பந்தமாக புது டில்லிக்கு நிரந்தரமாக செல்கிறார். தொடர்ந்து வெளியீட்டாளர் பொறுப்பில் அவர் இயங்க முடியாவிடிலும் சுட்டியின் வளர்ச்சிக்குத் தலை நகரிலிருந்து பணிபுரிவார். சுட்டியின் ஆசிரியர் குழு உறுப்பினரும், சுட்டி அச்சுப் பொறுப்பை கவனித்து வருபவருமான திரு. கி. இராமச்சந்திரன் வெளியீட்டாளராகவும் இவ்விதழ் முதல் பொறுப்பேற்கிறார்.

---

அவர்களது அநியாய எதிர் பார்ப்புகளை பூர்த்தி செய்வதால் நாமே சமுதாய விரோதிகளாகிறோம். ஆம். பிச்சைக்காரர் களை நாம் தான் உருவாக்குகிறோம்." அந்த அம்மையாரின் இந்தக் கூற்று சிந்தனைக்குரியது.

—நிலா

FREE E BOOKS - www.thamizham.net - TM2468 / April 2011



''சார் போஸ்ட்''

''வணக்கம்மா, ஹி ஹி பண்டிகையாச்சே''

''வாப்பா, வா. உள்ளே வந்து உட்கார். இவரு யாரு?''

''இவரும் இந்த ஏரியா போஸ்ட்மேன் தாங்க. நான் வராத நாள்ல இவரு வந்து டெட்டி பாப்பாரு.''

''அப்படியா தினமும் எங்களுக்கு ஒழுங்கா தபால் கொண்டு வர்றீங்க. உங்களைப் பாராட்டி இன்னிக்கு உபசரிக்கிறதுலே எனக்கு ரொம்ப சந்தோஷம். இந்தாங்க பலகாரம், பட்சணம் எல்லாம் சாப்பிடுங்க.''

''இல்லேம்மா, வீட்டுக்கு எடுத்திட்டுப் போறோம். பிள்ளைங்கல்லாம் இருக்கு.''

''அதுக்கென்ன, அதுங்களுக்கு தனியா கட்டித் தரேன், நீங்க இப்போ சாப்பிடுங்க.''

(சாப்பிட்டு முடிந்தவுடன்)

''சரிம்மா, அப்போ நாங்க வரவா?''

''நல்லது, போயிட்டு வாங்க.''

''ஹி, ஹி, இனாம் காசு ஏதும் இல்லிங்களா?

''பண்டிகைன்னா இனாம் கொடுக்கிறது ரொம்ப தப்புப்பா. நீ உழைத்துப் பிழைக்கிறவன். இனாம் கேட்டு உன் சுய கௌரவத்தை இழந்து பிச்சைக்காரனுக்கு சமமாக இறங்கலாமா? மனிதனை மனிதனாக நடத்த நான் விரும்புகிறேன். உனக்கு இனாம் கொடுத்து உன்னைப் பிச்சைக் காரனாகப் பார்ப்பது எனக்கு சகிககவில்லை.

இப்படிக் கூறிவிட்டு தபால்காரரின் முணுமுணுப்பை கவனியாமல் அந்த அம்மாள் தன் வேலையைக் கவனிக்க உள்ளே சென்று விட்டார்.

சென்னை அண்ணாநகரில் வசித்து வரும் இந்த அம்மையார் எந்த ஊழியருக்கும் இனாம் கொடுப்பதில்லை. இனாம் கொடுக்காவிட்டால் திட்டுவார்களோ, இனி ஒழுங்காக வேலை செய்யாது போய் விடுவார்களோ என்றெல்லாம் இவர் அஞ்சுவதில்லை.

''ஊழியர்களிடம் தேவையில்லாமல் அச்சம் கொண்டு

FREE E BOOKS - www.thamizham.net - TM2468 / April 2011

# நரம்பியல் மருத்துவர்
# டாக்டர். கனகா

தன்னிடமுள்ள கொஞ்ச நஞ்ச மருத்துவ அறிவைக் கொண்டு 24 மணி நேரமும் பணம் பண்ணும் மருத்துவ வணிகர்கள் பெருகி வரும் நாளில், இப்படியும் ஒரு டாக்டரா என்று வியந்து போனோம்.

ஆம் நரம்பியல் அறுவைத் துறையில் நிறைய ஆய்வு கள் செய்து டாகடர் பெற்ற டாக்டர் கனகா சென்னை அரசினர் பொது மருத்துவ மனையில் தன் பணியை ஒரு தவமாக எண்ணி வருகிறார் என்பது மிகையில்லை.

திருமணமே செய்யாமல், தனது மருததுவ பணியையே முழு நேர வாழ்வாக வாழ முடிவு செய்தார்.

புதிய கண்டு பிடிப்புகள் சாதாரண கீழ நடுத்தர நோயாளிகளையும் எட்ட வேண்டு மென்பதே அவரது அவா.

பல முறை வெளி நாடுகளுக்குச் சென்று வந்தாலும், தாய் நாட்டிலேயே தன் பணி பயனாக வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறார்.

நோயாளிகளோடு இரவு பகலாக உடனிருந்து சிகிச்சை செய்வதால் வாரத்திற்கு இரு நாட்கள் மட்டுமே அவரால் வீட்டுக்குச் செல்ல முடிகிறது. இவ்வளவு பெரிய மருத்துவர்க்குச் சொந்த கார் இல்லை. மின்சார ரயிலில் சாதாரணமாக, பயணமாகிறார். வெளியில் யாருக்கும் தனி மருத்துவம் செய்து சம்பாதிப்பதில்லை. அதனால் இழக்கும் வசதிகளைப் பற்றி அவர் கவலைப் படுவதும் இல்லை.

இந்தச் சந்திப்பு நிகழ்ந்த 6 மாதங்களுக்குப் பின்னால், ஒரு நாள் காலை பத்திரிகையில் 'டாக்டர் கனகா தனது பணியில் ஆழ்ந்திருக்கும் போது, திடீரென்று உள்ளே நுழைந்த தமிழக அமைச்சர் ஒருவரைக் கண்டு எழுந்த நிற்-காத பாவத்திற்காக சஸ்பெண்ட் செய்யப் பட்டிருக்கிறார்' என்ற செய்தியைப் படித்த போது...

அட அற்ப ஜென்மங்களே! அர்ப்பணிப்புகளல்ல, உங்களுக்கு அடி வருடிகளே வேண்டும்! —சந்திப்பு : ரமேஷ், எழில்

FREE E BOOKS - www.thamizham.net - TM2468 / April 2011

# வாசகர் குரல்

**இலவச உணவும் பகல் கொள்ளையும் :—**

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் பேருந்து ஒன்றில் மதுரையிலிருந்து திருநெல்வேலிக்குச் சென்றேன். வழியில் விருது நகரில் பேருந்து நிலையத்திற்குள் உள்ள ஒரு ஓட்டல் முன்பாக சாப்பிட நிறுத்தினார்கள். ஓட்டுநர், நடத்துனர்களுக்கு இலவச உணவு வழங்கப்படுவதால் அவர்கள் இவ்வாறு செய்வது அனைவருக்கும் தெரியும். ஆனால் அதற்கும் ஒரு எல்லை இல்லையா? காய்ந்து போன ஊசிப் போன பலகாரங்களை வைத்துக் கொண்டு கொள்ளை லாபம் தரும் விலையில் விற்று வருகிறார்கள். தாங்க முடியாமல் 'என்னய்யா அக்கிரமமிது' என்று கேட்டேன். அருகில் வேறு கடையேதும் இல்லாததாலோ என்னவோ திமிராகப் பதில் கூறுகிறார்கள். இதைத் தட்டிக் கேட்க இளைஞர்கள் முன் வர வேண்டும். அநியாய விலையில் விற்கும் ஓட்டல், பல சரக்கு, ஐவுளிக் கடைகள் முன்பாக அறப்போர் துவங்க வேண்டும். அதற்கு நானும் தயார்.

—மு. மகாலிங்கம், 1, வெங்கடாசலபதி தெரு, இ. எம். ஜி நகர், கே புதூர், மதுரை-7.

**அஞ்சலகத்தின் அநியாய சுறுசுறுப்பு :—**

எங்களூராகிய பாப்பா நாட்டில் உள்ள அஞ்சலகத்தின் அஞ்சல் பெட்டியில் திறக்கும் நேரம் 5-30 என்று எழுதி உள்ளது. ஆனால் 5 மணி அல்லது 5-15க்கே பெட்டியைத் திறந்து கடிதங்களை எடுத்து விட்டு மூடிவிடுகிறார்கள். இதனால் பக்கத்து கிராமங்களில் இருந்து வருபவர்கள் ஏமாந்து போய் அடுத்த நாளைய திறப்புக்கு கடிதங்களைப் போட்டு செல்கிறார்கள். இது தொடர்ந்து நீடிப்பதால் பொறுப்புள்ள அதிகாரிகள் கவனித்து கண்டித்தால் நலம் பயக்கும்.

—சு. எழில்தமிழன். பாப்பா நாடு-614 626

**திருச்சியில் ஒரு பயங்கர கும்பல் :—**

திருச்சி நகரில் குறிப்பாக சென்ட்ரல் தியேட்டரின் சுற்றுப்புறப் பகுதி, கல் மந்தை, தாரா நல்லூர், போன்ற காந்தி சந்தையின் சுற்றியுள்ள பகுதிகளில் மூன்று தலைவர்களின்கீழ் மூன்று வன்முறை கும்பல்கள் அட்டகாசங்கள்

FREE E BOOKS - www.thamizham.net - TM2468 / April 2011

செய்து வருகின்றன. நீண்டகாலமாக கள்ளச் சாராயம் உற்பத்தி செய்து விற்றுவந்த இந்தகூட்டம் தற்போது சாராயக்கடை உரிமை பெற்று உள்ளது. கட்டி வைத்து அடிப்பது, அபராதம் போடுவது உடமைகளை சேதப்படுத்துவது மிரட்டி பணம் நன்கொடையாகப் பெறுவது இவர்களுக்கு சர்வசாதாரணம். இப்பகுதிகளில் இவர்கள்தான் எல்லாம். சென்ற மூன்று மாதமாக பாதுகாப்பு கமிட்டி என்ற ஒன்று வைத்துக் கொண்டு புகார்களை தங்களிடமே தர வேண்டும். காவல் நிலையம் போகக்கூடாது என்று மிரட்டுகிறார்கள். 3-5-83ல் K. செல்வராஜ் என்ற நண்பர் கொலை செய்யப்பட்டு விட்டார். இது சம்பந்தமாக காவல் துறை நடவடிக்கையும் சட்ட பணியும் நடந்து வருகிறது. இடையில் இந்தக் கூட்டம் இங்குள்ள ஏழைகளின் வீடுகளில் புகுந்து சூறையாடி ரூ15000 மதிப்பு உள்ள பாத்திரங்கள், பழவண்டிகளை, கொள்ளையிட்டு சென்றுவிட்டதோடு இறந்தவர் அ.தி.மு.கவைச் சேர்ந்தவர் என்று கூறிக்கொண்டு கட்டாய தெருவரி போட்டும், நன்கொடை மூலமும் ரூ15000 வசூல் செயதனர். ஒரு ஆயிரம் மட்டும் இறந்தவருக்காகக் கொடுத்து விட்டு மீதிப் பணத்தில் ஏழைகளின் குடிசைகளைப் பிரித்து எறிந்து விட்டு அந்த இடத்தில் சுவர் கட்டி சிலம்புக் கூடம், ஜிம் போன்றவற்றை கட்டியுள்ளனர். இவற்றையெல்லாம் அங்குள்ள சாராயக் கடை உரிமையாளரும் அ.தி.மு.க பிரமுகரும் அவரது கடை வேலையாட்களுமே தலைமை தாங்கி செய்தார்கள். இவரை எதிர்த்து யாரும் செயல் பட்டால் அவர் உயிருடன் தப்ப முடியாது. மக்கள் பயம் அதிகரித்துள்ளது. இதைப் போக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். காவல் துறை இருப்பதே தெரியவில்லை.

—இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கிளை, திருச்சி-8, K. M. திராவிடன் திருச்சி-1, V. J. மணி, திருச்சி-2, மற்றும் பலர்

கின்றார்கள் என்றிருந்தோம்.

நாடகம் முடிந்த பிறகு விசாரித்த போது, இங்குள்ள ரசிகர்கள் தமிழகத்தில் உள்ளவர்களை விட தமிழ் மொழி மீதும், கலை-கலாச்சாரத்தின் மீதும் அதிக பற்றுடையவர்கள் என்பதையும் கலையை அமைதியாக இருந்து ரசிப்பவர்கள் என்பதையும் தெரிந்து கொண்டோம்."

FREE E BOOKS - www.thamizham.net - TM2468 / April 2011

# வித்தியாசமான ரசிகர்கள்

நமது திரையரங்குகளிலும் நாடக அரங்குகளிலும் நம தமிழ் மக்கள் ரசனையை வெளிப்படுத்தும் விதமே அநாகரிகமாக உள்ளது. தங்கள் அபிமான நடிகர்களை விளம்பரங்களில் கண்டால் கூட விசில் அடிப்பதும், கைதட்டுவதும் தலைமுறை தவறாது நடந்து வருபவை. முன்னாலேயே படம் பார்த்து விட்டு தம்மைக் கவர்ந்த வசனம் வரும் போது பலமாகக் கைதட்டி மற்றவர்கள் வசனத்தைக் கவனிக்க விடாமல் செய்து விடுவதும் காகிதத்தைக் கிழித்து உயரே வீசுவதும் ரசனையை வெளிப்படுத்துவதாக இல்லை. அநாகரீகத்தையே வெளிப்படுத்துகின்றன.

இவர்களது அகராதியில் கைதட்டுவது என்பது பாராட்டுவதை மட்டும் குறிப்பதில்லை. நிகழ்ச்சி தமக்குப் பிடிக்கவில்லையெனில் கலைஞர்களை திரைக்குப் பின்னால் அனுப்பி விட உதவும் ஒரு ஆயுதம்.

அண்மையில் மலேசியா சென்று நாடகம் நடத்தித் திரும்பியுள்ள திரு. மனோகரது நாடகக் குழுவின் நடிகைகள் அங்குள்ள தமிழ் ரசிகர்களைப் பற்றி கீழ்க்கண்டவாறு கூறியுள்ளனர்

"தங்களுக்குப் பிடித்தமான, தங்களை மெய்சிலிர்க்க வைக்கும் காட்சிகளில் அமைதியாக இருந்து உணர்ச்சி பூர்வமாக அவர்கள் நாடகத்தை ரசிக்கிறார்கள்.

நாடகம் ஆரம்பிக்கும்போதும் நாடக இறுதியிலும் மட்டுமே ரசிகர்கள் கைதட்டுகிறார்கள்.

'நாம் நடித்த காட்சி மிகவும் சிறப்பான காட்சியாயிற்றே ரசிகர்கள் ஏன் கைதட்டவில்லை. தமிழகத்தில் இந்தக் காட்சிகளில் மண்டபமே அதிருமே.

ஒரு வேளை நாம் ஏதாவது தப்பு செய்து விட்டோமோ, ஒன்று அஞ்சினோம்.

நாங்கள் தப்பு செய்திருந்தால் மனோகர் சாரின் கண்டிப்புக்கு ஆளாக நேரிடுமே என்று பயந்தோம்.

ஆனால் மனோகர் சார் நடித்த காட்சிகளின் போது கூட ரசிகர்கள் அமைதியாக இருப்பதைப் பார்த்து அவர்களுக்கு நமது மொழி புரியாமல் தான் அமைதியாக இருக்-

FREE E BOOKS - www.thamizham.net - TM2468 / April 2011

# இந்தியா நேற்று இன்று நாளை

**புதிய தொடர்**

'எல்லாவற்றையும் கடுமையாக விமர்சிப்பது மட்டுமே நம் பிரச்சனைகளுக்குத் தீர்வாகி விடுமா? இனி என்ன செய்ய வேண்டும். ஆக்கப் பூர்வமாக வழி சொல்லுங்கள்' என்று இடை விடாமல் கேட்டு வருவோர்க்குப் பதில் சொல்ல முயல்கிறது இத்தொடர். புதிய இந்தியாவை உருவாக்க ஆசைப்படுபவர்கள் இதைப் படித்து சிந்தியுங்கள். கட்சி அரசியலில் சிக்கி விரக்தியுடன் இருப்போர் புதிய நம்பிக்கை பெறுங்கள். ஒரு சில விஷயங்களைப் பற்றி முடிந்த முடிவோடு இருப்பவர்கள் கூட படித்துப் பாருங்களேன். தொடர் முழுவதையும் படித்து விட்டு விமர்சியுங்களேன்.

---

இந்தியாவின் கடந்த காலம் துயரமானது. நிகழ்காலம் கசப்பானது. சுதந்திரம் என்பது இவ்விரு பகுதிகளையும் இணைக்கும் ஒரு பாலம். இந்தியா உலகுக்கு என்ன வழங்கியிருக்கிறது, உலகத்திடமிருந்து என்ன பெற்றிருக்கிறது என்ற வரவு-செலவு திட்டம் வழக்கமான துண்டு விழுந்த 'பட்ஜெட்' ஆகவே இருக்கிறது.

வெள்ளைக்காரனை எதிர்த்துப் போராடியவர்களது வாழ்க்கை வரலாறு இன்று எச்சரிக்கையாகி விட்டது- விடுதலை என்பதன் பொருள் தவறாகப் புரிந்து கொள்ளப் பட்டிருக்கிறது. விடுதலை என்பது பிரிந்து போவது அல்ல. உறவுகளை முறித்துக் கொள்வது அல்ல.

விடுதலை என்பது உறவுகளை ஒழுங்குப் படுத்திக் கொள்வதாகும். இங்கே மனிதனுக்கும் மனிதனுக்குமான உறவுகள், இனத்துக்கும் இனத்துக்குமான உறவுகள், தலைமுறைக்கும் தலைமுறைக்குமான உறவுகள் இன்னும் சீராகவில்லை. அதன் விளைவே போராட்டங்கள்.

இந்திய விடுதலை ஒரு புள்ளியில் நின்று விட்டது. எதிர்காலம் இருட்டாகி விட்டது.

உலக நாடுகள் சிதறிக் கிடக்கின்றன.

ஜனநாயக முகாம்கள் சமுதாய அமைப்பில் கட்டுவிட்டு

FREE E BOOKS - www.thamizham.net - TM2468 / April 2011

விட்டன. சமுதாய முகாம்களோ ஜனநாயகத்தில் பட்டு விட்டன.

இரண்டையும் இணைத்து உலகுக்கு அளிக்கக் கூடிய வாய்ப்பு இந்தியாவுக்காகவே காத்திருக்கிறது.

**இந்தியாவின் தூக்கம் :**

இரு நூறு ஆண்டுகளாக ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடிய களைப்பினால் 25 ஆண்டுகளுக்கும் மேலாக இந்தியா தூங்குகிறது. இன்றுள்ள அரசியல் பொறுப்பற்ற தனம் புதிதாக வந்தது அல்ல. இந்திய அரசியல் வரலாறு என்பதே அது தான். இந்தியாவிலிருந்து ஆங்கிலேயரை விரட்ட இந்திய மக்களுக்கு இருநூறு ஆண்டுகள் ஆயிற்று என்று வரலாறு எழுதி வைக்கப்பட்டுள்ளது. ஆனால் உண்மை அதுவல்ல. இந்தியாவிலிருந்து ஆங்கிலேயர்களை விரட்ட வேண்டும் என்று இந்திய மக்கள் உணரவே இருநூறு ஆண்டுகள் பிடித்தது.

விடுதலைப் போராட்டத்தில் தலைவர்களின் ஆற்றலும் காலமும் மக்களைத் தயார் செய்வதிலேயே கழிந்தன. நம் முன்னோர்கள் இருநூறு ஆண்டுகளாக இந்நாட்டை அந்நியனிடம் அடகு வைத்தார்கள். நாம் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக நம் பொறுப்பற்ற தனத்துக்கு இந் நாட்டை அடகு வைத்திருக்கிறோம்.

இந்நாட்டை உருவாக்குவதில், பிரச்சனைகளில் பொது மக்களான நமது பங்கு என்ன? விலைவாசியைப் பற்றி பேசாதவர்கள் யார்? ஆனால் செயல் முறையில் ஈடுபட்ட நடுநிலைவாதிகள் எத்தனை பேர்? யாராவது ஏமாளி உணர்ச்சி வசப்பட்டவன் தோன்றி தன்னையும் தன் குடும்பத்தையும் அழித்துக் கொண்டபின் அவன் செத்துப் போனால் கூடி நின்று அழவும் கூடவே போய் அவன் நினைவுக்கும் சேர்த்து கல்லறை எழுப்பக் கூடிய மக்கள் தானே இங்கு நிறைந்திருக்கின்றனர். இவர்களைத் திருத்தாமல் அரசியல் வாதிகளிடம் போய் போரிடுவதில் என்ன பயனிருக்கும்? எத்தனையோ கோடி மக்களுக்காக ஒருவன் சாகத் தயாராக இருக்கும் போது அவனுக்கு நினைவுச் சின்னத்தை எழுப்பி கடமையைத் தட்டிக் கழிக்கின்ற பொறுப்பற்ற தன்மை தான் இந்தியாவின் பெரும் தூக்கம். (தொடரும்)

FREE E BOOKS - www.thamizham.net - TM2468 / April 2011

**பெண்ணுக்குப் பகை**

காதலுக்கு
கண்ணில்லை
ஆனால்
மாமியாரோ
ஒரே
கண்ணாய்
இருக்கிறாள் வரதட்சணை
யில்
பெண்ணுக்குப்
பகை
பிறிதொரு
பெண்ணே!

—பறயபை பரணி
(பயணம் கவிதைத்
தொகுப்பிலிருந்து)



**உயிர்**

'பயணம்
செய்பவர்களின்
மடியில் பணமிருந்தால்
வழியில் பயமிருக்குமாம்
இதனால்தான்
பயணம்
என்பதிலே
பயம்
பணம்
என்று சேர்ந்தே
இருக்கின்றதோ...!

—அல்லிஉதயன்
உளிகள் கவிதைத்
தொகுப்பிலிருந்து)

**அருவருப்பு**

சினிமா, கதைகளில்
வரும் கட்டாய ஆடைக்
குறைப்பு
உங்கள் இன்பத்தின்
எல்லையாய் அமைந்த போது
இவர்களின்
அரைகுறை
ஆடைகள் உங்களுக்கு
அருவருப்பாகத்தானிருக்கும்

—இரா. கோரைச்செல்வன்
'மலர்கள் பறிப்பதற்கல்ல
கவிதைத்தொகுப்பிலிருந்து)



FREE E BOOKS - www.thamizham.net - TM2468 / April 2011

# மத்திய உணவு கார்ப்பரேஷன்
## ஒரு கண்ணோட்டம்

"ரேஷன் கடை உணவுப் பொருளா? பாதி குப்பை தான். மலிவுங்கிறதத் தவிர தரத்தை எதிர்பார்க்க முடியாது" பெரும்பாலான மக்கள் கூறும் உண்மை இது. நியாய விலைக் கடைகளில் இத்தகைய அநியாயம் ஏன் எப்படி ஏற்படுகிறது? இந்தியாவிலுள்ள அனைத்து ரேஷன் கடைகளுக்கும் உணவுப் பொருளை பங்கீடு செய்து அனுப்பும் மத்திய உணவுக் கார்ப்பரேஷனின் இயக்கத்தை கொஞ்சம் கவனித்தால் காரணம் புரியும்.

விவசாயிகள் உணவுத்துறை அதிகாரிகளுக்கு ஒரு மூட்டைக்கு ரூ 1-50 லஞ்சம் கொடுத்தால் தான் தானியம் விலை போகும். இல்லையென்றால் பக்கத்து கிராமங்களி-லிருந்து வந்திருந்தாலும் ஒரு வாரத்திற்கு மேல் விற்பனைக்கு காத்திருக்க வேண்டும். இப்படி லஞ்சமாக மட்டும் ஒரு வருடத்தில் 5 அல்லது 6 லட்சம் ரூபாய் வசூலாகிறது. பணம் தான் பெரிது. தானியத்தின் தரம், நிறம், ஈரமானதா, உலர்ந்ததா என்பது பற்றி அதிகாரிகள் கவலையே படுவதில்லை. ஒவ்வொரு வருடமும் ஜனவரி மாதம் நடக்கும் அறுவடைக்கு லஞ்ச ரேட் பேசுவதற்கு அக்டோபர் மாதமே அதிகாரிகள் விவசாயிகளைப் பார்க்க வருகிறார்கள். இந்த லஞ்சத்தில் 60% உணவுத்துறை மேற்பார்வையாளர்களுக்கும் 10% காவல்காரர்களுக்கும் 30% உயர் அதிகாரிகளுக்கும் என்று பிரிக்கப்படுகிறது.

இந்தியாவின் 75% உணவுப் பொருள் பஞ்சாபிலிருந்து தான் கிடைக்கிறது. இங்குள்ள மோகா, கன்னா ஆகியவை ஆசியாவிலேயே பெரிய உணவு தானிய கிடங்குகள். கன்னாவிலுள்ள ஒரு அரிசி ஆலை அதிபர் கூறுகிறார்.

"ஒரு ரயில்வே வாகன் அரிசி ஆர்டருக்கு ரூ 1300 லஞ்சம் கொடுக்க வேண்டியுள்ளது. இதற்கான நம்பரை உணவுக் கட்டுப்பாடு அதிகாரியிடமிருந்து பெற அவருக்கு ரூ 100, தர நிர்ணய அதிகாரிக்கு ரூ 400, உணவுப் பொருள் ஆராய்ச்சி நிலையத்திற்கு ரூ 400, காவல்காரருக்கு ரூ 150

FREE E BOOKS - www.thamizham.net - TM2468 / April 2011

ஊழியருக்கு ரூ 150, அனுமதி ஆணை பெறுவதற்கு ரூ 100. வாகன் அனுமதிக்காக ரூ 200 என்று லஞ்சம் கொடுக்க வேண்டியுள்ளது."

கோணிப்பையில் கூட மோசடி நடக்கிறது. ரூ 6 விலையுள்ள தரமான கோணிப்பை தரப்படுவது கணக்கில் மட்டும் தான். உண்மையில் பழைய கோணிப்பைகளே அளிக்கப்படுவதால் கிடங்கிலிருந்து வாகன்களில் ஏற்று வதற்குள் வீணாகும் உணவுப் பொருள் கணக்கிலடங்காது.

வாகனில் ஏற்று முன் கடை நிலை போலீஸ் காரர் முதல் ஸ்டேஷன் மாஸ்டர் வரை லஞ்சத்திற்காக கை நீட்டுகின்றனர். 8 மணி நேரத்தில் ஏற்றப்பட வேண்டிய தானியத்தை 20 மணி நேரமாக அதிகரிக்க வாகனுக்கு ரூ 70 லஞ்சம். இப்படி வாகனில் ஏற்றுவதற்குள் கடல் போல உணவு தானியங்கள் பிளாட்பாரத்தில் கொட்டி விடுகின்றன. இந்த தானியத்தை அங்குள்ள ஏழை சிறுவர்கள் அள்ளிச் சென்று பக்கத்திலுள்ள கடைகளில் மிக மலிவாக விற்கிறார் கள். இந்த கடைக்காரர்கள் இந்த தானியங்களை அரிசி கிலோ ரூ 1-75 எனவும் கோதுமை கிலோ ரூ 1-00 எனவும் விற்கிறார்கள். (முதல்வர் என். டி. ராமராவ் கவனிப்பாராக) இப்படிக் கொட்டியதை எடுப்பதோடு இச்சிறுவர்கள் பிளேடு பொருத்தப்பட்ட குச்சிகளால் வாகன்களில் உள்ள கோணி களைக் கிழித்து திருடவும் செய்கிறார்கள்.

மத்திய உணவுக் கார்பரேஷனுக்குச் சொந்தமான கிடங்கில் 3 வருட காலமாக 10 லட்சம் கோதுமை மூட்டை கள் தேங்கிக் கிடக்கின்றன. இவற்றை பாதுகாப்பதற்காக வைக்கப்பட்டிருந்த மரக்கட்டைகள் என்றோ திருடப்பட்டு விட்டன. கோதுமை மட்டும் மக்கிப் போய்க் கொண்டிருக்-கிறது. இக்கோதுமை என்றாவது ஒரு நாள் நமது ரேஷன் கடைகளுக்கு நிச்சயம் வரும்.


நாணயமும் பொறுப்புணர்வும் இருந்தும் வேலை யில்லாமல் திண்டாடுவோர் மத்தியில் சலுகைகள் பல வற்றுடன் நிரந்தர வேலையும் அரசு ஊதியமும் பெற்றுக் கொண்டு அதிகாரப் பற்களால் எலிகளை போல மக்களை சுரண்டிக் கொழுக்கும் இந்த ஊழியர்கள் தான் உண்மை யிலேயே ஜனநாயகத்தின் எதிரிகள். —மனோ

FREE E BOOKS - www.thamizham.net - TM2468 / April 2011

## சுத்தம் சோறு போடும்—தெரிந்த உண்மை

கைப்பழக்கம் சித்திரம்
தந்தது—
சுவற்றில்நம்
கைப்பழக்கம் விசித்திரம்
தந்தது.






நாப்பழக்கம் தமிழ் அமுதத்தைத்
தந்தது—
வீதியில்
நாப்பழக்கம் வாய் உமிழைத்
தந்தது.

நீரைத்தான் கேட்டதோ
செடிகள்—
சிறு
நீரைத்தான் கேட்டதோ
கொடிகள்.






வரிக்குப் பயந்து
வாரிக் கொடுத்தார்கள்—
தம்
கதிக்குப் பயந்து
வாரிக் கொடுத்தார்கள்.

—திருமாலவன், (விடியல் மலர்கள் கவிதைத் தொகுப்பிலிருந்து)

## அசுத்தம் கூறு போடும்—தெரியாத உண்மை

FREE E BOOKS - www.thamizham.net - TM2468 / April 2011

சிறு கதை

# ஒரு பி.ஏ கரடியாகிறது!

அவன் ஒரு பி. ஏ. பட்டதாரி. வேலை தேடிப் பட்டணத்துக்குப் போனான். எந்தக் கம்பெனியிலும் அவனுக்கு வேலை கிடைக்கவில்லை. ஒரு சர்க்கஸ் கம்பெனிக்குச் சென்று வேலை கேட்டான்.

"சார், நீங்க எனக்கு பி. ஏ. படிப்புக்குத் தகுந்த வேலை எதுவும் தர வேண்டாம். வயிற்றுப் பிழைப்புக்காக எந்த வேலை கொடுத்தாலும் செய்யத் தயார்" என்று கெஞ்சினான் அந்த பி. ஏ.

"சரி, டெம்ப்ரரியாக ஒரு வேலை தருகிறேன். இங்கே நிஜக்கரடி எதுவும் இல்லை. எனவே நீ கரடி வேஷத்தில் நடிக்கனும்" என்றார் கம்பெனி முதலாளி.

பட்டதாரி சம்மதித்தான். பி. ஏ கரடியாகியது.

சிங்கம் அடைத்து வைக்கப்பட்டிருந்த கூண்டின் மேல் கரடி ஏறி நின்றது. ரசிகர்கள் ஆரவாரம் செய்தனர். கூண்டின் மேலிருந்த கரடியைப் பார்த்து சிங்கம் கர்ஜித்தது. கூண்டின் மேல் அங்கும் இங்கும் நடந்தது கரடி.

அப்பொழுது கூண்டின் மேற்பகுதி திடீரென்று சரிந்து விழவே கரடி கூண்டுக்குள் விழுந்தது. ரசிகர்களிடையே பீதி. சிங்கம் கரடியைப் பார்த்தது. கரடிக்கு ரத்தம் உறைந்தது.

பயத்தால் கரடி நடுங்கிக் கொண்டிருக்கையில் ஓர் அசரீரி ஒலித்தது.

"தம்பீ, பயப்படாதே!"

கரடி சுற்றும் முற்றும் பார்த்தது. மறுபடியும் அதே குரல்! "தம்பி பயப்படாதே!" பேசியது சிங்கந்தான். சிங்கம் தொடர்ந்தது.

"பயப்பட வேண்டாம்! நானும் உன்னைப் போல் தான். நீ பி. ஏ. படித்த கரடி. நான் எம். ஏ. படித்த சிங்கம். நான் உனக்கு முன்னால் வந்ததால் சிங்கம் ஆயிட்டேன். நீ கொஞ்சம் லேட். அதனால் கரடியாகி விட்டாய்!"

—திருச்சி வானொலியில் கேட்டவர்: கே. பாலு சாமி

FREE E BOOKS - www.thamizham.net - TM2468 / April 2011

## த.பெ.ஜெயின் கல்லூரிப் போராட்டம்

சென்னை துறைப் பாக்கத்தில் உள்ள த. பெ. ஜெயின் கல்லூரி, கல்வியைக் கூட வியாபாரமாக்க வந்த மார்வாடிகளால் கடந்த 10 ஆண்டுகளாக நடத்தப் படுகிறது.

நீண்ட ஊழல் பட்டியலே இக்கல்லூரி நிர்வாகத்தின் 10 ஆண்டு காலச் சாதனை. இதில் முக்கியமானது அப்பட்டமாக மாணவர்களை காப்பியடிக்க அனுமதித்து தேர்வு வணிகம் நடைபெற வழி வகுத்ததாகும்.

பல்கலைக் கழக ஆசிரியர் சங்கத்தில் (AUT) தங்களை ஈடுபடுத்திக் கொண்ட ஆசிரியர்கள் துணிவோடு தேர்வு ஊழலை மிகவும் போராடி களைந்தனர்.

நிர்வாகியும், 'முதல்வரும் ஆசிரியர் இயக்கத்தையும, அதில் தீவிரங்காட்டும் ஆசிரியர்களையும் ஒழித்துக் கட்ட, 6 ஆசிரியர்களை வேலை நீக்கம் செய்து பழி தீர்த்து கொண்டனர். 31 ஆண்டு காலம் அனுபவமிக்க முதுகலைப் பேராசிரியர் பாதிக்கப் பட்டவர்களில் ஒருவர்.

இந்த அநீதியை எதிர்த்து போராட்டத்தில் இறங்கிய ஆசிரியர்களுக்கு, மாணவர்களும முழு ஆதரவு தந்தனர். நிர்வாகம் சில எடுபிடி ஆசிரியர்களை ஏவி விட்டு எதிராட்டம் ஆடினர்.

இதற்கிடையில், மாணவர்கள் பாடங்களை இழக்காமலிருக்க விடுமுறையில் ஆசிரியர்கள் பாடம் நடத்த முயன்றனர். நிர்வாகம் வகுப்பு நடத்த தடை விதித்தது. தடையை மீறி வழக்கத்தை விட அதிகமான மாணவர்கள் வகுப்புகளுக்கு வந்தனர்.

அடக்கு முறைகளும், பணமும் செய்ய முடியாததை ஆசிரியர் இயக்கம் இங்கே செய்து காண்பித்துக் கொண்டிருக்கிறது.

நாளை மலரப் போகும் ஆசிரியர்-மாணவர்கள் ஆசிரியரல்லாத ஊழியர் இணைந்த ஜனநாயகப் படுத்தப் பட்ட கல்லூரி சூழலுக்கு இக்கல்லூரி வழி காட்டப் போகிறது.

—ஸ்டெனிஸ்லாஸ்

FREE E BOOKS - www.thamizham.net - TM2468 / April 2011

## திரையுலகப் பிரமுகர்கள் எம்.ஜி.ஆர். 3

எம்.ஜி.ஆர். இறந்து போவது மட்டுமல்ல, அவர் அடிபடுவது கூட தாங்கமுடியாத அளவுக்கு, தனது ரசிகர்களை அவர் தயார் செய்திருந்தார். எம்.ஜி.ஆர். இறந்துபோகும் பாசம் படம் தோல்வியடைந்தது போலவே 'சிரித்து வாழ வேண்டும்', 'நீரும் நெருப்பும்' ஆகிய படங்களும் வெற்றியடையவில்லை. இந்தப் படங்களில் எம்.ஜி.ஆர். இரட்டை வேடத்தில் தோன்றுகிறார். ஒரு எம்.ஜி.ஆரிடம் இன்னொரு எம்.ஜி.ஆர். மோதி, ஒரு எம்.ஜி.ஆர். தோற்கடிக்கப்படுவதைக்கூட இப்படங்களில் பாமரர்கள் தாங்கிக்கொள்ள முடியவில்லை! எனவே படம் வீழ்ந்தது.

மக்களை எந்த அளவுக்கு எம் ஜி.ஆர். நிஜ வாழ்விலிருந்து விலக்கி வைத்திருந்தார் என்பதற்கு கோவைப் பகுதியில் ஒருமுறை அவர் தேர்தல் பிரச்சாரத்திற்குச் சென்றபோது நடந்த ஒரு நிகழ்ச்சி சான்று. ஒரு விவசாயி தன் கையிலிருந்த குழந்தையை தூர நின்ற எம்.ஜி.ஆரிடம் வீசியெறிந்து "வாத்தியாரே! இதற்குப் பெயர் வையுங்களேன்" என்றார். நல்ல வேளையாக அருகிலிருந்த போலீஸ்காரர்கள் அந்தக் குழந்தையைத் தாவிப்பிடித்து காப்பாற்றினார்கள். கொஞ்சம் தவறியிருந்தாலும் குழந்தை கதி என்னவாயிருக்குமோ? இச்செய்கையால் கோபமடைந்த போலீஸ் அதிகாரி அவரை நெருங்கி, "என்ன ஐயா இது. அப்படித்தான் குழந்தையை வீசுவதா?" என்றார். தன் மீது கை வைத்த அந்தப் போலீஸ் அதிகாரியை வெகு அலட்சியமாகப் பார்த்து, "எடய்யா கையை, எங்க வாத்தியாரைப் பத்தி எனக்குச் சொல்லித்தறியா? எவ்வளவு உயரத்திலிருந்து நம்பியார், மனோகர் குதிக்கும்போது அலாக்காகப் பிடிக்கிறார், இந்தக் குழந்தையை-பச்சைக் குழந்தையை அவர் பிடிக்க மாட்டாரா என்ன? அவரைப்பற்றி ரொம்ப தப்பா எடை போட்டு விட்டாயே ? போ அப்பாலே" என்றாராம் அந்த அப்பாவி எம்.ஜி.ஆர். ரசிகர்.

இந்த மாதிரியான கண்மூடித்தனமான ரசிகர்களைத்

FREE E BOOKS - www.thamizham.net - TM2468 / April 2011

திட்டம் போட்டு எம்.ஜி.ஆர். உருவாக்கியது, நாளைககு எப்படியேனும் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும் என்ற திட்டத்தின் அடிப்படையில் தான்.

1953இல் கழகத்தில் உறுப்பினரான எம்.ஜி.ஆருக்கு, தி.மு.க. பத்தே ஆண்டுகளில் 1963இல், எம்.எல்.சி. பதவி அளித்தது. கட்சிக்காக நீண்டகாலமாக பெரிய தியாகம் செய்த கலைஞர்களையெல்லாம் ஒதுக்கிவிட்டு, எம்.ஜி. ஆருக்கு உள்ள மக்கள் செல்வாக்கைப் பயன்படுத்த தி.மு.க. இவரை எம்.எல்.சியாக உட்கார வைத்தது. தனது தனிப் பட்ட செல்வாக்கு, தி.மு.க.வின் செல்வாக்கைவிட உயர்ந் திருக்கும் என்ற தப்புக் கணக்கில் எம்.ஜி.ஆர். 1964இல் எம்.எல்.சி. பதவியிலிருந்து ராஜினாமா செய்தார். தி.மு.க. வின் மார்பு மீது அவர் பாய்ந்த முதல் பாய்ச்சல் இது. இந்த செய்தி வெளியான அன்று மாலையே இவர் நடித்த "என் கடமை" படம் தியேட்டர்களெங்கும் காற்று வாங்கியது. மறு நாளே டப்பா தூக்கப்பட்டு படம் மரண அடி வாங்கியது.

இன்னும் காலம் தனக்குக் கனியவில்லை என்பதை புரிந்துக் கொண்டார் எம்.ஜி. ஆர். எம். ஜி. ஆரை விட தி.மு.க மேலானது என்று ரசிகர்கள் உணர்கிறார்கள். எம்.ஜி.ஆர். என்ற தனி நபர் கழகத்தைவிட மேலானவன் என்று நிலை நாட்டுவதற்கு முன்னால் தி.மு.க. விலிருந்து பிரிவது முட்டாள் தனம் என்று முடிவுசெய்து குனிந்து கொண்டார். எனவே சாமர்த்தியமாக ஒரு பல்டி அடித்து "தெய்வத்தாய்" என்ற படத்தில் கழக உணர் வோடு தோன்றி பாடினார். இந்த புதுப்பித்தலுக்குப் பின்,



"என்ன தான் நடக்கும் நடக்கட்டுமே! இருட்டினில் நீதி மறையட்டுமே! தன்னாலே வெளி வரும் தயங்காதே! ஒரு தலைவன் இருக்கிறான் கலங்காதே"
(பணத்தோட்டம் : 1963)
1964இல் தி மு.க. எம்.எல்.சி பதவியை எம்.ஜி.ஆர். தூக்கி

FREE E BOOKS - www.thamizham.net - TM2468 / April 2011

தெய்வத் தாயும, பின்னால் வந்த அவர் படங்களும வெற்றி மேல் வெற்றி பெற்றன. "என் கடமை" அனுபவத்திற்குப்பின் எம். ஜீ. ஆர்

வெறிவதற்கு முன், காங்கிரஸ் காரர் ஜி. உமாபதி ஏற்பாடு செய்த காமராஜ் பிறந்த நாள் விழாவில் கலந்து கொண்டு "காமராஜர் என் தலைவர்! அண்ணா என் வழிகாட்டி" என்று பேசினார்.

மிகவும் விழிப்போடு திட்டமிட்டு செயல் பட்டார். தன் மேல் மூடத்தனமாக பக்தி வைத்திருக்கும் ஒரு போதைக்குரிய பாமரப் பட்டாளத்தை திரட்டுவதில் ஈடுபட்டார். சிதறிக் கிடந்த எம். ஜீ. ஆர் ரசிகர் மன்றங்களை ஒன்றிணைத்து; 'அனைத்துலக எம். ஜீ ஆர் ரசிகர் மன்றம்' என்ற பெயரில் ஓர் அரசியல் கட்சியின் இயக்கம் போல மாற்றினார். வேலை வெட்டி இல்லாத பல சோம்பேறிகளும், போக்கிரிகளும் இந்த ரசிகர் மன்றங்களில் புது கௌரவம் பெற்றனர். மூன்றாந்தரமான ரசனையைப் பேணிக் காத்து பட்டி தொட்டியெங்கும் கலாச்சார சீரழிவை ஏற்படுத்தினர்.

இந்தப் பட்டாளம் தி.மு.க. விற்குள் ஒரு போட்டி கழகமே நடத்தத் தொடங்கியது.

இந்தப் பின்னணியில் படங்களில் கழகம், கட்சி போன்ற சொற்களைத் தவிர்த்து. தி.மு.க. பிரச்சாரத்தைக் குறைத்து, கதா நாயகனான தன்னையே (எம்.ஜீ.ஆரையே) உயர்த்தியும், புகழ்ந்தும் கதை, வசனம், பாடல்களை அமைக்கக் கட்டாயப் படுத்தினார்.

"பூமியில் நேராக வாழ்பவர்கள் எல்லோரும் சாமிக்கு நிகரில்லையா? பிறர் தேவையறிந்து கொண்டு வாரிக் கொடுப்பவர்கள் தெய்வத்தின் பிள்ளையில்லையா?... மாபெரும் சபைதனில் நீ நடந்தால் உனக்கு மாலைகள் விழ வேண்டும். ஒரு மாற்றுக் குறையாத மன்னவன் இவனென்று போற்றிப் புகழ வேண்டும்" "வேட்டைக்கார"னில் இக்காலக் கட்டத்தில் வெளியான இப்பாடல் மேற்கண்ட நிலைக்குத் துல்லியமான உதாரணம்.

எம். ஜீ. ஆரின் இந்த பூதாகரமான தனி நபர் வளர்ச்சி பற்றி தி.மு.க தலைவர்கள் கவலைப்படாமலில்லை. எனினும் நடந்து கொண்டிருந்த காங்கிரஸ் ஆட்சியை 1967 தேர்தலில் வீழ்த்துவதற்கு தி.மு.க விற்கு ஓட்டுச் சேகரிக்க எம். ஜீ. ஆரின் புகழ் மிகவும் தேவைப்பட்டது. எனவே கழகம் எம். ஜீ. ஆரை பொறுமையுடன் சகித்துக் கொள்ள வேண்டியதாயிற்று.


(தொடரும்)

FREE E BOOKS - www.thamizham.net - TM2468 / April 2011

# சுத்தமற்ற கோவில்கள்

தூய்மையின் இருப்பிடமாகச் சொல்லப்படும் இறைவன் இருக்கும் இடம் மட்டும் தூய்மையாக இருக்க வேண்டாமா? நமது இந்தியக் கோவில்கள், ஆம். பாரம்பரியமிக்க நமது இந்து ஆலயங்கள் தான், பெரும்பான்மையானவை 'தூய்மை'க்கு எத்தனை எதிர் மறையாக இருக்கின்றன!

கோவில்களைச் சுற்றிலும் சுகாதார மின்மை, கோவிலுக்குள் தரை, தூண்கள் எல்லாம் ஒரே எண்ணை பிசுக்கு, அழுக்கு, கர்ப்பகிரகத்தினுள் எத்தனை எத்தனையோ ஆண்டுகளாகப் புகை மண்டி கரி பிடித்து இருண்டு கிடக்கும சுவர்கள்.



மண்டபங்களின் மேல் விதானம் முழுவதும் வெளவால்களின் குடியிருப்பு. அவைகளின் எச்ச நாற்றம் விபூதி, குங்குமம் வைக்கப் பட்டுள்ள இடம் சுத்தம் செய்யப்படாமல் அங்கே வருகின்ற மக்கள் அத்துனை பேர்களும் சகல விதமான வியாதியஸ்தர் உள்பட அதிலேயே கை வைத்து எடுத்து வாயிலும் போட்டுக் கொள்கின்ற காட்சி.

தூய்மையாக வைத்திருக்க பொருளாதாரம் இல்லை நிர்வாக அமைப்பு சரி இல்லை என்றும் சொல்ல முடியாது.

அரசாங்கம் இதற்கென்று ஓர் இலாகா ஏற்படுத்தி, ஓர் அமைச்சரையும் நியமித்து, ஓர் துறையையே நடத்தி வருகின்றதே. இவர்கள் அனைவரும் 'உண்டியல்,' 'கோவில் நகை' சமாசாரத்தில் மட்டுமே தங்கள் கவனம் முழுவதையும் செலுத்திக் கொண்டிருக்கிறார்களா?

வெளி நாடுகளில் உள்ள இதே நம் இந்துக் கோவில்கள் நமது கலை, கலாச்சார அமைப்பில் கட்டப்பட்டிருந்தாலும் மிகவும் தூய்மையாகப் பராமரிக்கப் படுகின்றனவே. (படம்)

—சுயராஜ்

FREE E BOOKS - www.thamizham.net - TM2468 / April 2011

# துணுக்குகள்

## நூதன தொலைபேசி

☐ தொலைவில் உள்ளவர்களிடம் 'பேசுவதற்கு' மட்டுமே தொலைபேசியைப் பயன்படுத்துகிறோம், ஆனால் டச்சு நாட்டில் 'தானே இயங்கும் நூலகம்' ஒன்றில் தொலைபேசி மூலம் வேண்டிய புத்தகத்தைப் பெற முடிகிறது.

மாணவர்கள் தங்களுக்குத் தேவையான புத்தகத்தின் எண்ணைச் சுழற்ற வேண்டியது. இந்த தொலைபேசிப் புத்தகப் பெயர்ப்பட்டியல் அறையில் பொருத்தியிருக்கிறார்கள். பிரத்தியேகமான முறையில் ஆறு தொலைபேசிகள் அந்த அறையில் இருக்கின்றன. விசேஷ விளக்குகள் ஒவ்வொரு மாடியிலும் உள்ளன. குறிப்பிட்ட புத்தகம் எந்த மாடியில் உள்ளது என்பதை இதன் மூலம் அறிய முடிகிறது. புத்தகம் கிடைத்தால் ஒரு சரிவான பெட்டியின் மூலம் அந்தப் புத்தகம் கீழே வந்துவிடுகிறது. புத்தகம் அகப்படாவிட்டால் 'லைப்ரேரிய'னுக்கு குறிப்பிட்ட விளக்கின் மூலம் செய்தியை அறிவிக்கிறது.

☐ ஒரு மின்சார பல்ப் சராசரியாக 750 முதல் 1000 மணி நேரம் வரை எரியும் தன்மை கொண்டது. கலிபோர்னியாவில் லிவர்மோர் என்ற இடத்தில் உள்ள தீயணைப்பு இலாகாவில் கார்பன் கம்பி இழை கொண்ட பல்ப் 1901-ம் ஆண்டிலிருந்து இன்றுவரை எரிந்து வருவது ஓர் அதிசயம் ஆகும்.

☐ நாணயங்கள், ரூபாய் நோட்டுக்கள் இவற்றை ஆய்ந்து பார்த்ததில் 13% உலோக நாணயங்களும் 42% காகித நோட்டுக்களும் நோய் அளிக்கும் பாக்டீரியாக்களைச் சுமந்து வருவதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

☐ அஸ்ஸாம் மாநிலத்தைச் சேர்ந்த முகம்மது நசீம் அலி என்ற உழவுத் தொழிலாளி 5 குழந்தைகளுக்கு தந்தை. இவர் தனது 4 குழந்தைகளை ஞாயிறு ஏலத்தில் விற்றிருக்கிறார். விற்பனையாகாத தனது முதல் மகனுடன் வீடு திரும்பியுள்ள இவர் தன்னையும் தன் குழந்தைகளையும் பட்டினியிலிருந்து மீட்கவே இவ்வாறு செய்ததாகக் கூறுகிறார்.

FREE E BOOKS - www.thamizham.net - TM2468 / April 2011

# சுட்டியார் பதில்

☐ அரசியல் வாதிகளின் சுய நலனை மக்கள் ஏன் சுலபமாக உணர்வதில்லை?

—எம். சம்பத், வேலாயுதம் பாளையம்

பெரும்பாலான மக்கள் தமது சுயநலனில் மூழ்கியிருப்பதால் தான்.

☐ கிரிக்கெட்டைப் பற்றி பெர்னார்ட் ஷா "பதினோரு முட்டாள்கள் விளையாடுவதை பதினோராயிரம் முட்டாள்கள் பார்க்கிறார்கள்" என்றார். சுட்டியார் இக்கருத்தை ஒப்புக் கொள்கிறீரா?

—ந. செந்தில் முரளி, கோவை-2

நிச்சயமாக. சுட்டியின் 2 ம் இதழில் "கிரிக்கெட் இமாலயப் பாழ்" என்ற கட்டுரையைப் படித்துப் பாருங்கள்.

☐ வெளி வந்து கொண்டிருக்கும் சில 'குப்பைப் பத்திரிகைகளைப் பற்றி உங்களின் கணிப்பு என்ன?

P. R. ராமச்சந்திரன், கோவை-7

குப்பைப் பத்திரிகைகள் தானே! காலப் போக்கில் தாமே மக்கி மடியும்.

☐ நம் நாட்டின் கம்யூனிச இயக்கங்களின் தற்போதைய நிலை பற்றி.

—மோ. விஜயகுமார், திருப்பூர்

தத்துவத் தெளிவற்றவர்களது தலைமைகளால் இயக்கங்கள் தயக்கங்களாக இழிந்து அழிந்து கொண்டிருக்கின்றன.

☐ சும்மா வாய்ச்சவடலாக வரதட்சணை வாங்கமாட்டேன் எனக்கூறிவிட்டு திருமணத்தின் போது பெரிய லிஸ்டு போடும் ஆண்களைப்பற்றி...

—ஓ. எஸ். பாலகிருஷ்ணன், திருப்பரங்குன்றம்.

நெஞ்சில் உரமும் நேர்மைத்திறமும் அற்றவர்கள். கூலிக்கு குடும்ப வேலை செய்பவர்கள்.

FREE E BOOKS - www.thamizham.net - TM2468 / April 2011

# செம்மலர் ஆசிரியருக்கு,

வணக்கம். சுட்டி ஜுலை 83 இதழில் உங்கள் செம்மலர் இதழை முற்போக்கு இதழ்கள் வரிசையில் அறிமுகப்படுத்தி விமர்சித்தோம். செம்மலர் போன்ற இதழ்களையும் நம் வாசகர்கள் வாங்கிப் படிக்க வேண்டும் என்ற உணர்வே இந்தத் தொடருக்குக் காரணம்.

நம் நல் உறவைக் களங்கப் படுத்துவது போல, உங்கள் 1983 இதழில், ஏனோ காரணமின்றி சுட்டியை கிறிஸ்துவ மிஷினரி சார்புடையோர் நடத்தும் ஏடென்றும், அமெரிக்க உளவு இலாக்கா சி. ஐ. ஏ யின் கையாள் என்பது போலவும் எழுதி ஓர் அசிங்கமான பொய் எச்சிலை சுட்டியின் மேல் காறித் துப்பியிருக்கிறீர்கள். இந்த அநாகரிகமான 'புரூட்டஸ்' வேலையை நீங்கள் செய்திருப்பது மிகவும் வேதனை தரும் விஷயமாகும்.

சுட்டி ஒரு சமூக மாறுதலுக்காக தன்னை அர்ப்பணித்து கொண்டு எந்த நசிவு சக்திகளுக்கும் துளியும் பலியாகாமல் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவும், தேதி தவறாமல் இதழ்களைக் கொண்டு வரவும் படும் பிரசவ வேதனைகள் கொஞ்ச நஞ்சமல்ல. கடந்த 32 மாதங்களில் நிறைய ஆயிரங்களை இழந்து, மேலும் இழக்காமலிருக்க, மிகவும் துல்லியமான கணிப்புகளுடன், கட்டுப்பாட்டுடன், கடும் உழைப்புடன் பத்திரிகையியல் நுட்பங்களை அதிகப்பட்சம் பயன்படுத்தி எல்லாவற்றிற்கும் மேலாக உயிருக்குயிரான எங்கள் வாசகர்களின் பேராதரவுடன் தான் இந்த முயற்சியை வெற்றியாக்கியிருக்கிறோமே தவிர, வேறு எந்தப் பின்னணியுடனும் அல்ல என்பதை மடியில் கனமின்றி, வழியில் பயமின்றி உறுதிப் படுத்துகிறோம்.


சுட்டியின் எழுத்துக்களை, விமர்சியுங்கள். கடுமையாக விமர்சியுங்கள். அவற்றை வரவேற்று நேசிக்கவே செய்வோம். அதனை விட்டு விட்டு, சுட்டி இலவச 'மாதிரி இதழ்' அனுப்புவதைக் கொச்சைப்படுத்தி, சுட்டி செய்த விளம்பரத்தைத் திரித்து மேற்கோள் காட்டி 'இலவச வினியோகம் செய்வதற்கு இவர்களுக்குப் பணம் எங்கிருந்து கிடைக்கிறது' என்று விஷமத்தனமாக கயிறு திரிக்காதீர்கள்.

FREE E BOOKS - www.thamizham.net - TM2468 / April 2011

சுட்டியின் பழைய இதழ்களாக இப்படி அனுப்பப்படுவது, பலர் அறிமுக முகவரிகள் அனுப்பியும் மாதம் 1000 பேருக்கு மேல் இதுவரை சென்றதில்லை. எங்கள் முன் இதழ்களைக் கொண்டே குறைவான செலவில் சுட்டியை எளியமுறையில் விளம்பரப்படுத்திக் கொள்வதற்குக் கூட ஏன் இப்படி அபத்தமாக அர்த்தம் கற்பிக்கிறீர்கள்!

தேன் மழை பத்திரிகையின் சில அம்சங்களைப் புகழ்ந்து எழுதி விட்டதனால் மட்டும் சுட்டி மிஷினரி சார்புடைய இதழென்றால், 'தாமரை'யின் சிறப்பு அம்சங்களை தொட்டு காட்டினோமே, அதற்கு நீங்கள் வலது சாரி கம்யூனிஸ்டு கட்சி பின்னணியுடையது என்று குத்தலாமே முத்திரை! ஏன் உங்கள் செம்மலரின் கதைத் தரத்தையும் கூட சிறப்பித்து எழுதினோமே அதற்கு நீங்கள் எவ்வளவு காசு தந்தீர்கள்?

தயவு செய்து ஊதா கண்ணாடியைக் கழட்டுங்கள். ஏனெனில் உங்களைப் பற்றி எழுதிய வரிகளைக் கூட உங்களால் சரியாக படித்துப் பார்க்க முடியவில்லை. எழுத்துக்கள் மட்டுமன்றி, கார்டூனும் உங்களுக்குப் புரியவில்லை.



கடைசியாக ஒன்று; சுட்டியின் வெளிப்படையான எழுத்துக்களைப் போல அதன் வரவு செலவுகளும், அதன் பின்னணியும் பிறவும் வெளிப்படையானதே! சுட்டி ஒரு திறந்த புத்தகம். யாரும் எப்போதும் எதனையும் முறைப்படி பரிசோதித்துக் கொள்ளலாம்.

அரசியல் வாதிகளின் மேடை பேச்சைப் போல 'வேஷத்தைக் கலைப்பதாக' உங்கள் வாசகர்களைக் குழப்பிய உங்களால், எங்கள் மேல் சுமத்திய அவதூறை எள்ளளவேனும் நிரூபிக்க முடியுமா. நிரூபிக்கத் தவறினால் உங்கள் அடுத்த இதழில் உங்கள் தவறான எழுத்திற்குத் திருத்தம் வெளியிடுவது தான் மரியாதை; முற்போக்குத் தனம்; மனிதத்தன்மை; செய்வீர்களா?

அன்புடன்,
ஆசிரியர் குழு

FREE E BOOKS - www.thamizham.net - TM2468 / April 2011

# “ரங்கா டைப் பௌண்ட்ரி”

- ☐ போஸ்டர் அச்செழுத்துக்கள்
- ☐ எல்லாவித, எல்லா மொழி ஈய எழுத்துக்கள்
- ☐ அச்சக உபகரணங்கள்
- ☐ புது அச்சகம் தொடங்க நாணயமான வழிகாட்டுபவர்கள்.

அலுவலகம் : 73, ஹண்டர்ஸ் சாலை, வேப்பேரி, சென்னை.112.
தொழிலகம் : 38, குட்டி செட்டி தெரு, பெருமாள் பேட்டை, சென்னை.7.
தொலை பேசி : 37999, 664293

உங்கள் பிரச்சனைகள் எதுவாக இருப்பினும் எங்களுக்கு எழுதுங்கள், விரிவான ஆலோசனைகளை ஒரு வாரத்திற்குள் அனுப்பி வைக்கிறோம். அஞ்சல் செலவு மற்றும் ஆலோசனை கட்டணமாக உங்களால் இயன்ற தொகையினை தவறாது அனுப்பி வையுங்கள். முகவரி: திருமதி எம். மைதிலி, 27-பி, திருவள்ளுவர் தெரு, இராமாபுரம், அம்பத்தூர், சென்னை-600053.

உழைப்பால் உயர்ந்த ஜி.டி. நாயுடு (ரூ. 9-00), டி.ஜி. எஸ். தினகரன் ஒரு பகல் கொள்ளைக்காரர் (ரூ. 1-00), ஆசிரியர்: மெர்வின், அஞ்சல் செலவு இலவசம். கிடைக்குமிடம்: பாலன் சகோதரர்கள், கதிர்வேடு, புழல் (அஞ்சல்), சென்னை-600066.

தமிழ்நாடு முழுவதும் ஏஜண்டுகள் தேவை. நல்ல கமிஷன். முழு விபரம் பெற ரூ. 5-00 M. O. செய்க. ஸ்ரீ மூகாம்பிகை லோபின், 24, மேற்கு வீதி, ராயபுரம், திருப்பூர்-638601.

# நாட்டு நடப்பு

**மத்தியப் பிரதேசம் :—** மத்திய பிரதேசத்திலுள்ள தேவாஸ் என்ற இடத்தில் அலிகள் ஒரு மாநாடு நடத்தினர். மாநாட்டின் முடிவில் ஒரு அலியை இந்தியப் பிரதமராக நியமிக்க வேண்டும் என்று கோரி ஜனாதிபதிக்கு ஒரு தந்தி அனுப்பினர். இப்படி அவர்கள் கோருவதற்கு காரணம் வருமாறு :— பெற்றோரது செல்வாக்கைப் பயன்படுத்தி வளர்வதற்கு அலிகளுக்குப் பிள்ளைகளில்லை.

(—தெஹிந்து கல்கத்தா)

**ஒரிஸ்ஸா :—** இங்குள்ள ஒரு தெருவில் கழிவுநீர் வெள்ளமெனப் பெருக்கெடுத்து வீடுகளில் புகுந்து விட்டது. அதை அகற்ற முடியாமல் பலவித இன்னல்களுக்குள்ளான மக்கள் நகராட்சியிடம் மனு கொடுத்தனர். 6 மாதங்களாகியும் எந்த நடவடிக்கையும் எடுக்கப் படவில்லை. கோபமுற்ற 100 பெண்கள் ஒன்று திரண்டனர். பட்டிண்டா என்னுமிடத்தில் நகராட்சியினர் கூட்டம் நடத்துகையில் இவர்கள் உள்ளே புகுந்து கோப்புகள், நிகழ்ச்சி குறிப்புகள் முதலான அனைத்தையும் பறிமுதல் செய்தனர். விளைவு? சுகாதாரத் துறையினர் அந்த நிமிடமே துப்புரவுப் பணியில் ஈடுபடுத்தப் பட்டனர். 6 மாதமாக நடக்காமலிருந்தது ஒரே நாளில் நடந்து முடிந்தது.

—(டைம்ஸ் ஆப் இந்தியா)

**கர்நாடகம் :—** இங்குள்ள ஹொாச நகர் என்னுமிடத்தில் தீண்டாமை புதுத் திருப்பம் பெற்றுள்ளது. இவ்விடத்தை அடுத்துள்ள அல்ஜரிமண்டரி என்னும் கிராமத்தில் எல்லாக் கிணறுகளும் வறண்டு விட்டன. ஆனால் அரிஜனங்கள் வசித்த பகுதிகளில் மட்டும் கிணறுகளில் நிறைய தண்ணீர் இருந்தது. ஆனால் இவர்கள் மற்ற சாதி மக்கள் தமது கிணறுகளில் தண்ணீர் எடுக்க தடை விதித்து விட்டனர். வழக்கம் போல உயர் அதிகாரிகள் இதில் தலையிட்டு நிலைமையை சீராக்கும் படி மனுப் போடப் பட்டது.

—(டெக்கான் ஹெரால்டு)

FREE E-BOOKS - www.thamizham.net - TM2468 / April 2011

- சுட்டி ஒவ்வொரு மாதமும் முதல் தேதி வெளி வரும.
- 12 இதழ்கள் அஞ்சலில் பெற சந்தா ரூ. 5-00.
- தனிப்பிரதி 50 காசு.
- எல்லாத் தொடர்புகளுக்கும்:—

ஆசிரியர் குழு, 'சுட்டி'
1494, அண்ணா நகர், சென்னை 600 040.

**சுட்டி விற்பனையாளர்கள :**

சுட்டி விற்பனையாகாத எல்லா நகரங்களிலும், ஊர்களிலும், கிராமங்களிலும் தேவை. எளிய விதிமுறைகள், தரமான கமிஷன். சுட்டியின் கொள்கைகளில் ஆர்வம் கொண்ட வாசகர்களுக்கு முன்னுரிமை உண்டு.

**சுட்டியில் மலிவு-வரி விளம்பரம்:**

சுட்டியில் 3 வரிகளுக்குள் (சுமார் 15 வார்த்தைகள்) அடங்குமாறு உங்கள் செய்தியை வெளியிடுவதற்குக் கட்டணம் ரூ. 15/- மேற்கொண்டு வரியொன்றிற்கு ரூ. 5/- மட்டுமே.

**சுட்டியை இலவசமாக அறிமுகப்படுத்துங்கள்**

'சுட்டி'யை இன்னும் படிக்காத நண்பாகள் உங்களுக்கு இருக்கிறார்களா? அவர்களுக்கு சுட்டியை அறிமுகபபடுதத விரும்புகிறீர்களா? சுட்டியை நிச்சயம் வரவேற்கக் கூடியவரா?

அப்படியானால் அவர்கள் முகவரியை எங்களுக்கு எழுதி அனுப்புங்கள். எங்கள் செலவில் இலவசமாக ஒரு மாதிரி இதழ் உங்கள் சார்பாக அனுப்புகிறோம். அஞ்சலட்டையின் மேல் மாதிரி இதழ் எனக் குறிப்பிடவும்.

ஒருவர் எவ்வளவு நண்பர்களின் முகவரி வேண்டுமானாலும் அஞ்சலட்டையில் எழுதி அனுப்பலாம்.

**சுட்டி முன் இதழ்கள் வேண்டுமா?**

இதழ் எண்கள் 1 முதல் 7 10 19 21 22 30 தவிர பிற இதழ்கள் அனைத்தும் கிடைக்கும். பெற விரும்புவோர் இதழுக்கு 25காசு வீதம் அஞ்சல் தலைகள் அல்லது பணவிடை (M.O.) அனுப்பினால், எங்கள் செலவில் அவை உங்களை அடையும்.

FREE E BOOKS - www.thamizham.net - TM2468 / April 2011


# நமது சுண்ணாம்பு மருத்துவம்

சுண்ணாம்பில் இரண்டு வகை. ஒன்று கல் சுண்ணாம்பு; மற்றது கிளிஞ்சல் சுண்ணாம்பு. இரண்டும் பயனானதே.

- நாய், பூனை, பூரான், எலி, பெருச்சாளி, மூஞ்சூறு கடித்து விட்டால், சுண்ணாம்பு, மஞ்சள், உப்பு இம்மூன்றையும் சம எடை எடுத்துத் தண்ணீர் விட்டு மைபோல் அரைத்து கடி வாயில் வைத்துச் சூடேறத் தேய்த்து வர விஷம் நீங்கும்.
- தேள் கடிக்கு, சுண்ணாம்புடன் கொஞ்சம் நவச்சாரம் சேர்த்து நசுக்கி அதைக் கொட்டின இடத்தில், வைத்துத் தேய்த்தால் விஷம் இறங்கும்.
- கடுமையான தொண்டைக் கட்டா? படுக்கும் முன் சம அளவு தேனும், சுண்ணாம்பும் கலக்கவும், சூடாகும் இந்தப் பசையை தொண்டையில் பூசவும். பிடித்துக் கொள்ளும். காலை தொண்டை தெளிவாகும்.
- மஞ்சள் காமாலைக்கு கால் படி தயிருடன் கொட்டைப் பாக்களவு சுண்ணாம்பைச் சேர்த்து 3 நாள் காலையில் மட்டும் சாப்பிட்டால் குணமாகும்.
- வெந்நீர் அல்லது நெருப்புப் பட்ட புண்ணுக்கு, சுண்ணாம்பைப் போல் இரு பங்கு நீரில் கலக்கவும். மேலே தெளிந்த நீரை மட்டும் எடுத்து தேங்காயெண்ணெயைக் கலந்து குழப்பித் தடவி வர புண் ஆறும்.
- கட்டிகள் பழுத்து உடைய, சுண்ணாம்பு, மாவிலங்கம் பட்டை இவை இரண்டையும் சம எடை எடுத்து அரைத்து நல்லெண்ணெயில் குழைத்துப் போட்டு வரக் கட்டி பழுத்து உடையும்.
- வீக்கம், இரத்தக் கட்டுக்கு, சுண்ணாம்பு துணி சுட்ட கரி, பனைவெல்லம் இவற்றைச் சம எடை எடுத்து மைபோல அரைத்து வீக்கம் உள்ள இடத்தில் போடக் குணம் தெரியும்.
- சிறு நீர் இறங்காவிட்டால் சுண்ணாம்பை உமிழ்நீர் விட்டுக் குழைத்து அதைத் தொப்புகளைச் சுற்றி தடவி விட்டு கால் பெருவிரல் நரம்பிலும் தடவிக் கால் விரலை நன்கு தேய்த்து விடுக. நீர் எளிதாக இறங்கும்.

(அடுத்து : நமது "கோழி முட்டை" மருத்துவம்) —சித்தன்


FREE E-BOOKS - www.thamizham.net - TM2468 / April 2011




FREE E BOOKS - www.thamizham.net - TM2468 / April 2011

கட்டுரை மாதஇதழ் 1, அக். 1983 Regd. No. TN/MS(N)/317
Licensed to post without prepayment Licence No. TN/MS(N)WPP-56

http://www.thamizham.net
FREE BOOKS (TAMIL)





# Sakthi Sugars Limited

## A PACE SETTER for RURAL PROSPERITY

SAKTHI SUGARS has engineered a breakthrough in sugarcane production with innovative technology and the farmers have achieved a successive Increase in yield of sugarcane to 45 tonnes from 28 tonnes to earn an additional income of Rs. 3,000/-Per acre.

SAKTHI SUGARS has enriched the springs of rural life by distributing over Rs. 20 crores as sugarcane price annually to over ten thousand farmers (a bulk of Whom are small and marginal farmers) and generating gainful rural employment to over fifty thousand families in the primary, secondary and tertiaray sectors.

SAKTHI SUGARS has promoted a number of rural development programmes (I) Sakthi High School Provides a conducive environment for study and development of rural children. (II) Sakthi Institute of Techno logy promotes the technical skill of the youth, and (III) V. M. Kailasam Hospital provides medical care for the region.

Head Office:
73-A, Race Course Road
Coimbatore-641 018

Reg. Office & Factory:
Sakthinagar-638 315.
Periyar District.


FREE E BOOKS - www.thamizham.net - TM2468 / April 2011